**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஊத்தங்கரை .**
**முன்னிலை – திரு. து. சரவணன் பி.ஏ., பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,ஊத்தங்கரை
2026 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
**சுருக்கு விசாரணை வழக்கு எண்.311/2023**

**CNR NO:TNKI12-002102-2023**

அரசுக்காக:–
காவல் உதவி ஆய்வாளர்,
ஊத்தங்கரை காவல் நிலையம்,
குற்ற எண். 409/2022 .... குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

அம்மாசி த/பெ.சின்னதம்பி .... குற்றஞ்சாட்டப்பட்டவர்

இவ்வழக்கு 28.04.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – 1 திருமதி.R.டீனா அவர்களும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. A.சரவணன் அவர்கள் முன்னிலையாகி நடத்திட இரு தரப்பு வாதுரைக் கேட்கப்பட்டு, சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, நன்கு ஆராய்ந்த பின்னர் இன்று, இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கிடும்.

**தீர்ப்புரை**

கடந்த 08.09.2022 ம் தேதி இரவு சுமார் 10.20 மணிக்கு புதுக்காடு – ஊத்தங்கரை ரோட்டில் வெங்கடதாம்பட்டி ஊருக்கு அருகில் உள்ள வேகத்தடையில் சாட்சி பழனிசாமி என்பவர் சாட்சி சுரேஷ்குமார் என்பவரை TN-24-AP-7176 Splender என்ற இரண்டு சக்கர வாகனத்தின் பின்னால் உட்காரவைத்து ஊத்தங்கரை நோக்கி ஓட்டி

வந்துக்கொண்டிருந்தபோது அவர்களுக்கு பின்னால் வந்த TN–24–AT–1393 pick Up வண்டியை எதிரி அம்மாசி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சாட்சியின் இரண்டு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியும் பழனிசாமிக்கு இடது கண்புருவத்தின் மேல், இடது பக்க தோள்பட்டை இடது கை முட்டி, இடது கால் முட்டி, முட்டிக்கு கீழ் சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும் எதிரி மீது ஊத்தங்கரை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் இதச பிரிவுகள் 279,337–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி முன்னிலையானதும், எதிரிக்கு அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு நகல் வழங்கிய பின்பு, எதிரியிடம் குற்றம் பற்றி வினவிய போது, எதிரி குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என்றார். இருதரப்பும் கேட்டும் வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைய முதல் நோக்கில் போதுமான ஆரம்ப ஆதாரங்கள் இருந்ததால், எதிரி மீது இதச பிரிவுகள் 279, 337ன் கீழும், குற்றச்சாட்டுகள் வனைந்து படித்துக் காட்டி விளக்கி கூறி கேள்வி கேட்டபோது, எதிரிகள் மீண்டும் குற்றங்களை மறுத்து குற்றவாளி இல்லை என்றார்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>

5. கடந்த 08.09.2022 ம் தேதி இரவு சுமார் 10.20 மணிக்கு

புதுக்காடு –ஊத்தங்கரை ரோட்டில் வெங்கடதாம்பட்டி ஊருக்கு அருகில் உள்ள வேகத்தடையில் சாட்சி பழனிசாமி என்பவர் சாட்சி சுரேஷ்குமார் என்பவரை TN–24–AP–7176 Splender என்ற இரண்டு சக்கர வாகனத்தின் பின்னால் உட்காரவைத்து ஊத்தங்கரை நோக்கி ஓட்டி வந்துக்கொண்டிருந்தபோது அவர்களுக்கு பின்னால் வந்த TN–24–AT–1393 pick Up வண்டியை எதிரி அம்மாசி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சாட்சியின் இரண்டு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியும் பழனிசாமிக்கு இடது கண்புருவத்தின் மேல், இடது பக்க தோள்பட்டை இடது கை முட்டி, இடது கால் முட்டி, முட்டிக்கு கீழ் சொறப்காயம் ஏற்படுத்தியதாகவும் பட்டியல் சாட்சி–8 குட்டியப்பன் ஊத்தங்கரை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் கடந்த 09.09.2022–ஆம் தேதி ஊத்தங்கரை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.ராஜேந்திரன் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று ஊத்தங்கரை அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த பழனிச்சாமி என்பவர் வந்து வாக்குமூலம் பதிவு செய்தும், காவல்நிலையம் வந்து குற்ற எண் 409/2022 சட்டப்பிரிவுகள் 279, 337 இதச வழக்கின் பதிவு செய்தும், வழக்கின் சம்பவ இடத்திற்கு 9/9/2022 மதியம் 12.00 மணிக்கு சாட்சிகள் கந்தசாமி, அரிபுத்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தும், பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் பழனிச்சாமி, சுரேஷ்குமார், கந்தசாமி, அரிபுத்திரின் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் விபத்துக்குள்ளான வாகனங்களை

தணிக்கை செய்து ஆய்வறிக்கை வழங்கிய திரு.ஆனந்தன் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் வழக்கில் காயமடைந்த பழனிச்சாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரவீனா கோமதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் வழக்கினை விசாரித்து, குட்டியப்பன் என்பவர் எதிரிகள் மீது 279, 337 இதச பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் அரசு தரப்பில் உள்ளது.

<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:–</u>

6. அரசுத்தரப்பில் நடந்த சம்பவம் பற்றியும், விபத்து பற்றியும் அதனால் தனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை பெற்றது குறித்தும் வாக்குமூலம் கொடுத்தது பற்றியும் அ.சா.1 பழனிச்சாமி என்பவர் விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் புகார்வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகவும், சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 சுரேஷ்குமார் சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றியும் சாட்சி 1 பழனிச்சாமிக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்து சென்றது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சிய மளித்துள்ளார். இவ்வழக்கில் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கும் காவல் உதவி ஆய்வாளர் மோகன் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். கடந்த 09.09.2022–ஆம் தேதி ஊத்தங்கரை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.ராஜேந்திரன் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று ஊத்தங்கரை அரசு மருத்துவமனை

சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த பழனிச்சாமி என்பவர் வந்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் காவல்நிலையம் வந்து குற்ற எண் 409/2022 சட்டப்பிரிவுகள் 279, 337 இதச வழக்கின் பதிவு செய்தும், பின்னர் வழக்கின் சம்பவ இடத்திற்கு 9/9/2022 மதியம் 12.00 மணிக்கு சாட்சிகள் கந்தசாமி, அரிபுத்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தும் பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் பழனிச்சாமி, சுரேஷ்குமார், கந்தசாமி, அரிபுத்திரின் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் விபத்துக்குள்ளான வாகனங்களை தணிக்கை செய்து ஆய்வறிக்கை வழங்கிய திரு.ஆனந்தன் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் வழக்கில் காயமடைந்த பழனிச்சாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரவீனா கோமதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் அவர் மூலம் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், பார்வைமகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆகவும், விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகளை கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:-</u>**

7. இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு எதிராக அமைந்துள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவிய போது, அவற்றை எதிரிகள் மறுத்துள்ளார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

இருதரப்பும் கேட்கப்பட்டது.

**ஆய்வுக்குரிய பிரச்சினை:–**

8. இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீதான இதச பிரிவுகள் 279, 337ன் படியான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**வாதுரைகள்:–**

9. அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அலுவலக சாட்சி எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே எதிரிகளை தண்டிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

10. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதிடும் போது அரசுத்தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும், வேண்டுமென்றே ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றும், அரசுத்தரப்பில் சம்பவ சாட்சி மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி வழக்கு சம்பவம் பற்றி சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாகியுள்ளனர் என்றும், எனவே அரசுத் தரப்பில் எதிரிகளின் மீதான குற்றச்செயல்கள் நிரூபிக்கப்படாததால் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

**சாட்சியங்களின் மதிப்பீட்டல்:–**

11. இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்தபோது வழக்கின் சம்பவம் பற்றி கூறக்கூடிய சாட்சி அ.சா.1 பழனிச்சாமி இந்த வழக்கை தீர்மானிக்கும் முக்கிய சாட்சியாக இந்நீதிமன்றம் கருதுகிறது. வழக்கு சம்பவம் பற்றி புகார் வாக்குமூலம் கொடுத்த பழனிச்சாமி என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் இந்நீதிமன்றத்தில் முதல் விசாரணைச் சாட்சியத்தின் போது ஆஜர் எதிரியைத் தெரியும் என்றும் ஒரே

ஊரை சேர்ந்தவர்கள்  கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக தானும் சுரேஷ்குமார் என்பவரும் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு இரவு 9.00 மணியளவில் வெங்கடாதாம்பட்டி அருகே இருசக்கர வாகனத்தில் வரும்போது 7176 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் வந்தபோது விபத்து ஏற்பட்டது. யாருடைய தவறால் விபத்து ஏற்பட்டது என்று என்னால் சரியாக சொல்ல முடியாது என்றும் தாங்களும் எதிரியும் சமாதானமாகிவிட்டோம் என்றும் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1  புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் எதிரி மீது நடவடிக்கை எதுவும் வேண்டாம் என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 பழனிச்சாமியின் சாட்சியம் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 சுரேஷ்குமார் தனது முதல் விசாரணை சாட்சியத்தில்  அ.சா.1 பழனிச்சாமி  தனது மாமா என்றும் ஆஜர் எதிரியைத் தெரியும் என்றும் ஓரே ஊர்காரர் என்றும் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு இரவு 9.00 மணியளவில் வெங்கடாதாம்பட்டி அருகே இருசக்கர வாகனத்தில் வரும்போது 7176 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் வந்தபோது விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தில் தனக்கும் தலையில் லேசாக காயம் ஏற்பட்டது என்றும் தன் மாமாவிற்கு தலையில், கையில் காயம் ஏற்பட்டது என்றும் யாருடைய தவறால் விபத்து ஏற்பட்டது என்று தன்னால் சரியாக சொல்ல முடியாது என்றும் தாங்களும் எதிரியும் சமாதானமாகிவிட்டோம் என்றும் போலிசார்

தன்னை விசாரித்தார்கள் என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.2 சுரேஷ்குமாரின் குறுக்குவிசாரணை சாட்சியமும் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. இவ்வழக்கின் காவல் உதவி ஆய்வாளர் அ.சா.3 மோகன் தனது சாட்சியத்தில் கடந்த 09.09.2022–ஆம் தேதி ஊத்தங்கரை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.ராஜேந்திரன் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று ஊத்தங்கரை அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த பழனிச்சாமி என்பவர் வந்து அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் காவல்நிலையம் வந்து குற்ற எண் 409/2022 சட்டப்பிரிவுகள் 279, 337 இதச வழக்கின் அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், பின்னர் வழக்கின் சம்பவ இடத்திற்கு 9/9/2022 மதியம் 12.00 மணிக்கு சாட்சிகள் கந்தசாமி, அரிபுத்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்தும் பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் பழனிச்சாமி, சுரேஷ்குமார், கந்தசாமி, அரிபுத்திரின் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் விபத்துக்குள்ளான வாகனங்களை தணிக்கை செய்து ஆய்வறிக்கை வழங்கிய திரு.ஆனந்தன் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து TN24AP7176 Splendor Plus என்ற

வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், TN24AT1393 Bolero Maxi Truck Plus என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும் பின்னர் வழக்கில் காயமடைந்த பழனிச்சாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரவீனா கோமதி என்பவரை விசாரித்து அ.சா.ஆ.9 விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பதிவு செய்தும் பின்னர் வழக்கினை விசாரித்து, புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் குட்டியப்பன் என்பவர் எதிரிகள் மீது 279, 337 இதச பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. இவ்வழக்கில் சம்பவம் பற்றி புகார் வாக்குமூலம் கொடுத்த புகார்தாரர் மற்றும் கண்ணுற்ற சாட்சி ஆகியோர் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் மேற்கொண்டு வழக்கில் எவ்வித பயனும் ஏற்படாது என்று கருதி மற்ற அனைத்து பட்டியல் சாட்சிகளையும் நீக்கரவு செய்துவிட்டு இந்த வழக்கில் அ.சா.1 பழனிச்சாமி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, இவ்வழக்கினை பதிவு செய்து, புலன் விசாரணை மேற்கொண்டு, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த பட்டியல் சாட்சி–8 குட்டியப்பன் காவல் உதவி ஆய்வாளர் என்பவரின் கையெழுத்து நன்கு பரிச்சயம் ஆன அ.சா.3 காவல் உதவி ஆய்வாளர் மோகன் என்பவரை விசாரித்து வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் குறியீடு செய்து, அரசுத்தரப்பு சாட்சி விசாரணையை முடித்து அரசுத்தரப்பு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார்.

15. மேற்கண்டவாறு அரசுத்தரப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 சாட்சியின் சாட்சியத்தை பரிசீலனை செய்யும்போது, எதிரி வாகனத்தை

அதிவேகமாகவோ, அஜாக்கிரதையாகவோ, மனித உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையிலோ வாகனத்தை ஓட்டி வரவில்லை என்பது தெள்ளத் தெளிவாக தெரிகின்றது. இச்சூழ்நிலையில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, வழக்கின் புலன்விசாரணை மேற்கொண்டது பற்றி அ.சா.3 மோகன் காவல் உதவி ஆய்வாளர் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளித்திருந்தாலும், அரசுத்தரப்பில் எதிரியை வழக்கு சம்பவத்தோடு தொடர்புபடுத்தி வழக்குடன் இணைக்கக்கூடிய நேரடி சாட்சியம் எதுவும் இந்த வழக்கில் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக இல்லாததாலும், எதிரிகள் தான் புகார்தாரரான அ.சா.1 பழனிச்சாமியை கெட்டவார்த்தையால் திட்டி அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தினார்கள் என்று நிரூபிக்கப்படாததாலும், இவ்வழக்கில் சம்பவ சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் அரசுத்தரப்பு வழக்கினை ஆதரிக்கும் வண்ணம் சாட்சியமளிக்காததாலும், எதிரி மீதான குற்றச்செயல்கள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது.

16. முடிவாக எதிரி மீதான இதச பிரிவுகள் 279, 337 ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிகளிடமிருந்து பெற்ற பிணையமானது மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு தானாகவே முறிந்துவிடும் என உத்தரவிடப்படுகிறது.

17. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. எனவே இது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தி சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் நாள் என்னால் திறந்த இந்த நீதிமன்ற அவையில் அவையறிய பகரப்பட்டது.

D SARAVANAN
Judicial Magistrate
Digitally signed by D SARAVANAN
Location: Uthangarai

நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

1) அ.சா.1 – திரு. பழனிச்சாமி

2) அ.சா.2 – திரு. சுரேஷ்குமார்

3) அ.சா.3 – திரு. மோகன், காவல் உதவி ஆய்வாளர்.

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

1) அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1ன் கையொப்பம்

2) அ.சா.ஆ.2 – சமாதானமனு

3) அ.சா.ஆ.3 – புகார் வாக்குமூலம்

4) அ.சா.ஆ.4 –முதல் தகவல் அறிக்கை

5) அ.சா.ஆ.5 – பார்வைமகஜர்

6) அ.சா.ஆ.6 – மாதிரிவரைபடம்

7) அ.சா.ஆ.7–TN24AP7176 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை

8) அ.சா.ஆ.8 – TN24AT1393 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை

9) அ.சா.ஆ.9 – விபத்து பதிவேடு

10) அ.சா.ஆ.10– காயச்சான்றிதழ்

**அரசு தரப்பு சான்று பொருள் :–இல்லை**

**எதிரி தரப்பு சாட்சிகள்:–** இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணம்:– இல்லை**

D SARAVANAN
Judicial Magistrate
Digitally signed by D SARAVANAN
Location: Uthangarai

நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை

**பின்குறிப்பு:–**

1. எதிரி பிணையில் இருந்து முன்னிலையானார்.

2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தப்படவில்லை.

3. வழக்கு முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

**நகல்:**

**கிருஷ்ணகிரி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

Judicial Magistrate

D SARAVANAN

Digitally signed by D SARAVANAN
Location: Uthangarai